பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

12 12 2024 12 40
வியாழக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ஜல்ஜீவன் இயக்கத்தின் மூலம் வீடுகளுக்கே குடிநீர் வழங்கப்படுவதால் பெண்கள் தற்போது திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. ரயில் விபத்துக்களைத் தடுக்க கவச் கருவியை அதிக அளவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. போர்ச்சுக்கல் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Paulo Rangel** இந்தியாவில் நான்கு நாள் பயணமாக இன்று புதுதில்லி வந்துள்ளார்
4. இஸ்ரேல் படைகளும், ஹமாஸ் அமைப்பினரும் உடனடியாக போர் நிறுத்தம் செய்யக்கோரி ஐ நா பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
5. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமான தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
6. ஒடிஸா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சதிஷ் கருணாகரன் - ஆத்யா வாரியத் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

மத்திய அரசின் ஜல்ஜீவன் இயக்கத்தின் மூலம் கிராமப்புறப் பகுதிகளில் வீடுகளுக்கு குழாய்வழி குடிநீர் வழங்கப்படுவதால் பெண்கள் தற்போது திறன் மேம்பாடு மற்றும் சுயசார்பில் கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இந்த இயக்கத்தால் கிராமப்புற பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது மேம்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ரயில் விபத்துக்களைத் தடுப்பதற்கான கவச் கருவி மேம்படுத்தப்பட்டு அதனை அதிக அளவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கும்முடிப்பூண்டி ரயில் விபத்து தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்துள்ள அவர், இந்த கருவியை 687 ரயில்களில் பொருத்துவதற்காக ஐயாயிரத்து 116 கிலோமீட்டர் தொலைவுக்கு கண்ணாடி இழை கம்பிவடம் அமைக்கவும் 521 ரயில் நிலையங்களில் இதற்கான சாதனங்களை பொருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

அடுத்தக்கட்டமாக பத்தாயிரம் ரயில்களில் இந்த கருவியை பொருத்துவதுடன், 15 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கு இதற்கான கம்பி வடங்களை பதிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரயில் விபத்துக்கள் தொடர்பாக விசாரணைக்குழு தெரிவிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர், ரயில்களில் பயணம் செய்ய நான்கு வகையான மாற்றுத்திறனாளிகள், 11 வகையான நோயாளிகள் மற்றும் எட்டு வகையான மாணவர்களுக்கு சலுகை கட்டணம் அளிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தேசிய புலனாய்வு முகமையை வலுப்படுத்த 2019-ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த அமைப்பில் 810 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு நித்தியானந்த் ராய் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்துள்ள அவர், ஒரு கூடுதல் தலைமை இயக்குநர், ஆறு ஐ ஜி-க்கள் மற்றும் 105 தொழில்நுட்ப நிபுணர் பணியிடங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

இந்த அமைப்பால் புலன் விசாரணை மேற்கொள்ளப்படும் வழக்குகளை விரைந்து விசாரிக்க ஏதுவாக நாடு முழுவதும் 51 சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், 135 சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் மற்றும்

42 முதுநிலை அரசு வழக்கறிஞர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் திரு நித்யானந்தராய் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

மகளிர் பாதுகாப்புக்கான நிர்பயா நிதியத்திலிருந்து இதுவரை ஐயாயிரத்து 759 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அமைப்புகளால் பயன்படுத்தப்பட்டுள்ளது என மத்திய மகளில் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் திருமதி சாவித்ரி தாகூர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவிதத அவர், இந்த நிதியம் தொடங்கப்பட்டதிலிருந்ருது மத்திய மாநில அரசுகளின் பல்வேறு துறைகள் தெரிவித்த ஆலோசனையின் அடிப்படையில் 49 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

ஆதித்யா எல்-ஒன் விண்கலம் அனுப்பும் தகவல்களை அதிக அளவில் பயன்படுத்த ஏதுவாக அறிவியல் பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்படும் என மத்திய விண்வெளித்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனைத் தெரிவித்த அவர், நாட்டில் உள்ள சூரிய அறிவியல் மற்றும் சூரிய இயற்பியல் விஞ்ஞானிகள் இந்த விண்கலத்தின் தரவுகளை பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறினார்.

ஆதித்யா எல்-ஒன்-யிலிருந்து கிடைக்கும் தகவல்கள் பருவநிலை ஆராய்ச்சிக்கும், வானிலை முன்னறிவிப்புகளை மேம்படுத்த உதவிடும் என்றும் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை. திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம் உள்ளிட்ட 23 மாவட்டங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று முதல் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. சென்னையிலும் நேற்று இரவு முதல் மழை பெய்து வருகிறது.

டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகை மாவட்டங்களிலும் கனமழை பெய்து வருகிறது.

நாகை மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக வளைநிலங்களில் தண்ணீர் தேங்கி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - செ ஜெ ) --- 40 செகண்ட்*

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தொடர் மழை காரணமாக திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அணையிலிருந்து 13 ஆயிரம் கன அடி தண்ணீர் தென்பெண்ணை ஆற்றில் வெளியேற்றப்படுகிறது.

இதன் காரணமாக திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் தென்பெண்ணை ஆற்றின் கரைப்யோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் கார்த்திகை தீபத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

நாளை மாலை மலை உச்சியில் தீபம் ஏற்றுவதற்கான கொப்பரை இன்று எடுத்துச் செல்லப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ரவிச்சந்திரன் ) -42----- செகண்ட்*

**[]<<<>>>[]**

காஸா பகுதியில் இஸ்ரேல் படைகளுக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே உடனடியாக நிபந்தனையற்ற நிரந்தர போர் நிறுத்தம் செய்யக்கோரும் தீர்மானம் ஐ நா பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிணைக் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனவும் இந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மொத்தம் உள்ள 193 உறுப்பு நாடுகளில், இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 158 நாடுகள் வாக்களித்துள்ளன.

**[]<<<>>>[]**

போர்ச்சுக்கல் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Paulo Rangel** இந்தியாவில் நான்கு நாள் பயணமாக இன்று புதுதில்லி வந்துள்ளார்.

அவரது இந்த பயணம் இந்தியா – போர்ச்சுக்கல் இடையேயான பன்முக உறவை வலுப்படுத்தும் என வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்துள்ளார்.

போர்ச்சுக்கல் அமைச்சர் நாளை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இதையடுத்து அவர் கோவா செல்கிறார்.

**[]<<<>>>[]**

ஒடிஸா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதிஷ் கருணாகரன் - ஆத்யா வாரியத் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது

இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-12, 21-7 என்ற செட் கணக்கில் இந்தியாவின் ரோஹித் மோகன்குமார் - ரிது வர்ஷினி இணையை வென்றது.

**[]<<<>>>[]**

உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் **ding liren** -இடையேயான இறுதிச்சுற்று ஆட்டம் இன்று நடைபெறுகிறது,

சிங்கப்பூரில் பிற்பகல் மணி 2-30-க்கு இப்போட்டி தொடங்குகிறது.,

கடைசி சுற்றில் வெற்றிபெறும் வீரர் பட்டத்தை வெல்வார்.

இப்போட்டி ட்டிராவில் முடிந்தால் டை-பிரேக்கர் முறை கடைபிடிக்கப்படும்.

**[]<<<>>>[]**

ஆசிய இளையோர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 8-30-க்கு தொடங்குகிறது.